# ஏல அறிவிப்பு

**JBJ** - நிறுவனத்தின் அரசால் முடக்கப்பட்ட கீழ் கண்ட வழக்கு சொத்துக்கள் ஏலம் விடுவதற்காக தினத்தந்தி நாளிதழ் (திருநெல்வேலி மாவட்ட பதிப்பு) நாள். 30.07.2015ல் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

தேதி : 30.07.2015

திருநெல்வேலி பதிப்பு

தினத் தந்தி



தமிழ்நாடு அரசு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி
முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்பு சட்டம் 1997
தமிழ்நாடு சட்டம் 44/1997

ந.க.எண்.அ4/46303/2012 — ஏல விளம்பரம் — நாள்: 21.07.2015

ஏல நாள்: 20.08.2015 நேரம் காலை 10.00 மணி

விபர அட்டவணை

| வ.எண். | சர்வே எண். | வகைபாடு | விஸ்தீரணம் ஹெக்டேர் | 19. | 339 | புன்செய் | 1.44.0 |
|---|---|---|---|---|---|---|---|
|  |  |  |  | 20. | 351/1 | புன்செய் | 0.56.5 |
| 1. | 377/7 | புன்செய் | 0.27.5 | 21. | 351/3 | புன்செய் | 0.72.0 |
| 2. | 377/1 | புன்செய் | 1.67.5 | 22. | 355/4 | புன்செய் | 0.14.0 |
| 3. | 329/2 | புன்செய் | 0.13.0 | 23. | 1071/2 | புன்செய் | 1.73.5 |
| 4. | 329/3 | புன்செய் | 0.30.0 | 24. | 365/2b1 | புன்செய் | 0.03.0 |
| 5. | 329/5 | புன்செய் | 0.47.0 | 25. | 368/2 | புன்செய் | 0.75.5 |
| 6. | 340/1 | புன்செய் | 0.65.5 | 26. | 366/3A | புன்செய் | 3.94.5 |
| 7. | 837/4 | புன்செய் | 1.47.5 | 27. | 366/4 | புன்செய் | 0.32.5 |
| 8. | 838/1 | புன்செய் | 0.08.5 | 28. | 368/5 | புன்செய் | 0.17.0 |
| 9. | 838/2A | புன்செய் | 0.65.5 | 29. | 368/1 | புன்செய் | 0.67.0 |
| 10. | 839/1A | புன்செய் | 0.43.0 | 30. | 368/2 | புன்செய் | 1.53.5 |
| 11. | 839/3A | புன்செய் | 0.43.5 | 31. | 369/1 | புன்செய் | 0.48.0 |
| 12. | 840/1 | புன்செய் | 0.63.0 | 32. | 370/1 | புன்செய் | 1.12.5 |
| 13. | 840/2 | புன்செய் | 0.63.5 | 33. | 328/3A2 | புன்செய் | 0.06.5 |
| 14. | 840/3 | புன்செய் | 0.03.5 | 34. | 328/4B2 | புன்செய் | 0.05.5 |
| 15. | 1069/13 | புன்செய் | 0.22.0 | 35. | 1069/11B | புன்செய் | 0.03.0 |
| 16. | 1069/4 | புன்செய் | 0.35.0 | 36. | 334/4 | புன்செய் | 0.24.5 |
| 17. | 329/1B | புன்செய் | 0.04.5 | மொத்தம்: 23.96.0 ஹெக்டேர் |  |  | (58.20 ஏக்கர்) |
| 18. | 338/4 | புன்செய் | 0.23.0 |  |  |  |  |

5. ஆதார் அட்டை, PAN Card, Passport, Voter ID ...

6. சொத்தினை 18.08.2015 வரை பார்வையிடலாம்.

7. ... (Upset Price) ...

செ.ம.தொ.இ/932/வரைகலை/2015

## தமிழ்நாடு அரசு
## மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி
## முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்பு சட்டம் 1997
## தமிழ்நாடு சட்டம் 44/1997

**ந.க.எண்.சி4/46303/2012**

### ஏல விளம்பரம்

**நாள்: 21.07.2015**

சென்னை 102, அண்ணா நகர், ஸி பிளாக், எண்.44/6 என்ற முகவரியில் இயங்கி வந்த நிதி JBJ City Developers Limited என்கிற நிதி நிறுவனம் பணம் முதலீடு செய்தவர்களை மோசடி செய்தது தொடர்பாக சென்னை பொருளாதார குற்றப் பிரிவு குற்ற எண்.09/2009 பதியப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், செட்டிகுறிச்சி கிராமம் புல எண்.289-ல் உள்ள 10.40 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசு ஆணை எண்.530 உள் (துறை) நாள்: 13.07.2012-ன்படி கையகப்படுத்துதல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மேற்படி பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்கள் பொது ஏலத்தில் விட்டு அதில் பெறப்படும் தொகையை முதலீட்டாளர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அதன் விவரங்களுடன் தக்க உடமையாக தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி அவர்களிடம் எழுத்துப் பூர்வமாக இந்த அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 15 தினங்களுக்குள் தங்களுடைய ஆட்சேபனைகளை தெரிவிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஆணையின்படி கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பொது ஏலம் விடப்படுகிறது.

**ஏல நாள்: 19.08.2015 நேரம் காலை 10.00 மணி**

**இடம்: வட்டாட்சியர் அலுவலகம், கோவில்பட்டி, ஏலம் நடத்தும் அலுவலர்: மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி**

**விவர அட்டவணை**

**மாவட்டம்: தூத்துக்குடி வட்டம்: கோவில்பட்டி கிராமம்: செட்டிகுறிச்சி**

| வ.எண். | சர்வே எண். | வகைபாடு | விஸ்தீரணம் |
|---|---|---|---|
| 1. | 289 | புன்செய் | 10.40 ஏக்கர் |

ஏல சொத்துக்களை பார்வையிட விருப்பமுள்ளோர் கோவில்பட்டி வட்டாட்சியர் முன் அனுமதியுடன் பார்வையிடலாம்.

மேற்படி பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் முன் வைப்புத் தொகையாக (EMD) ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வங்கி வரைவோலையாக செலுத்த வேண்டும். ஏலத்தொகையை ஏலம் விட்ட அன்றோ அல்லது பத்து தினங்களுக்குள், தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை அவர்களது பெயரில் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலையாக செலுத்த கோரப்படுகிறது. குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள்ளாக ஏலத்தொகையை செலுத்தத் தவறினால் முன்னறிவிப்பின்றி ஏலம் ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டுவரப்படும். இவ்வாறு மறு ஏலத்திற்கு கொண்டுவரும்போது அரசுக்கு ஏதேனும் நஷ்டம் ஏற்படின், அத்தொகை முழுவதையும் மற்றும் மறு ஏலம் நடத்தப்படுவதால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தையும் ஏலம் எடுத்து முழுத்தொகையையும் கட்டத்தவறிய நபரே ஏற்க வேண்டும். ஏலம் நடத்துவது அல்லது ரத்து செய்வது தொடர்பான அனைத்து அதிகாரங்களும் ஏலம் நடத்தும் அலுவலரிடமே இருக்கும்.

**ஏல நிபந்தனைகள்:**

1. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகள் ஏலம் இறுதி செய்யப்படும் வரை இந்த ஏலம் தற்காலிகமானது. மேல் முறையீடுகள் ஏதேனும் இருப்பின் ஏலம் நடைபெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஏலம் நடத்தும் அலுவலரிடம் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். மேலும், ஏலம் நடத்தப்பட்ட பின்பு எஞ்சிய தொகை செலுத்த குறைந்தபட்சம் 30 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும்.
2. ஏல சொத்தின் தன்மை குறித்து வினாக்களுக்கு அரசு பொறுப்பேற்காது.
3. ஏலம் எடுக்கும் நபர்கள் நேரடியாக அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட முகவர்கள் மூலமோ ஏலம் எடுக்கலாம். முகவர்கள் மூலம் ஏலம் எடுத்தால் முதல்வர்களால் முகவர்களை அங்கீகரித்து கையொப்பமிட்ட கடிதம் அளிக்க வேண்டும், இல்லையெனில் ஏலம் தள்ளுபடி செய்யப்படும்.
4. ஏலத்தை தள்ளி வைத்தல் மற்றும் ரத்து செய்யும் நேர்வுகளில் முன் தொகை திருப்பி வழங்கப்படும்.
5. ஆதார் அட்டை, PAN Card, Passport, Voter ID, ஓட்டுநர் உரிமம், அரசினால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை ஆகியவைகளை ஏல விண்ணப்பத்துடன் இணைக்கவும்.
6. சொத்தினை 18.08.2015 வரை பார்வையிடலாம்.
7. சொத்து அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலையை (Upset Price) விட குறைவாக ஏலம் எடுக்க இயலாது.
8. ஏலம் நடத்தும் அலுவலர், எவ்வித காரணமுமின்றி ஏல கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அனைத்து அதிகாரமும் உண்டு.

**செ.ம.தொ.இ/931/வரைகலை/2015**

**தகுதி பெற்ற அலுவலர் மற்றும்**
**மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி**

# பொது ஏலம் மூலம் அசையாச் சொத்துக்கள் ஏலம் விடுவது குறித்த அறிவிப்பு மற்றும் நிபந்தனைகள்

## இதனால் அனைவருக்கும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால்

**ந.க.எண்.ச2/39182/2012** **நாள்: 02.07.2015**

தமிழ்நாடு முதலீட்டாளர்களின் நலன் பாதுகாப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 44/97)ன் உட்பிரிவு 4ன் கீழ் அரசாணை எண் 530 உள் (காவல் XIX) துறை நாள் 13.07.2012ன்படி இடைமுடக்கம் செய்யப்பட்டு திருநெல்வேலி மாவட்ட எல்லைக்கு உட்பட்ட இனங்களில் தகுதி பெற்ற அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலராகிய நான், சட்டப்பிரிவு 4(3)ன் சிறப்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் மனு எண் 9/2013ன் 10.01.2014 நாளிட்ட தீர்ப்பின்படி சொத்து இடைமுடக்கம் உறுதி செய்யப்பட்டு, தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட அசையாச் சொத்தினை ஏலம் விட இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

| உரிமையாளரின் பெயர் | புல எண் | வட்டம் | கிராமம் | Doc.No. | விஸ்தீரணம் ஹெக்டேர் | மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச விலைமதிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நில மதிப்பு | கட்டிட மதிப்பு | மொத்த மதிப்பு |
| மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தகுதி வாய்ந்த அலுவலர், திருநெல்வேலி | 61 | இராதாபுரம் | [illegible] | 255 | 4.46.00 | ரூ.17,87,376/- | - | ரூ.17,87,376/- |
| | 261/1 | | | 2662 | 0.74.00 | ரூ.99,90,000/- | | ரூ.99,90,000/- |
| | 728 | | | 149 | 3.16.00 | ரூ.3,09,68,000/- | | ரூ.3,09,68,000/- |
| | | | | | 8.36.00 | மொத்தம் | | ரூ.4,27,45,376/- |

நான்கு கோடியே இருபத்தி ஏழுலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரத்து முன்னூற்று எழுபத்தி ஆறு ரூபாய் மட்டும்.

மேற்படி ஏல விற்பனை 2015ம் ஆண்டு 8 மாதம் 11ஆம் தேதி செவ்வாய் கிழமையன்று முற்பகல் 11.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

மேலே குறிப்பிட்ட நாளில் நடத்தப்படும் பொது ஏலம் மூலம் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகையே சம்பந்தப்பட்ட அசையா சொத்திற்கான விற்பனை தொகையாக எடுத்துக் கொள்ளப்பட்டு விற்பனையை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### ஏல நிபந்தனைகள்

1. விண்ணப்பத்தில் ஏலம் கோர இருக்கும் சொத்தின் விபரம், கேட்பு வரைவோலை விபரம், ஏலதாரரது முழு முகவரி மற்றும் புகைப்படம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.
2. ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் திரும்பத் தரக்கூடிய பிணை வைப்புத் தொகையாக ரூ.25,000/-க்கான கேட்பு வரைவோலையினை (Demond Draft) ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பதவியின் பெயரில் பெற்று ஆஜர்படுத்த வேண்டும்.
3. ஏலம் கேட்பதற்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே ஏலம் நடத்தும் இடத்திற்கு வந்து கேட்பு வரைவோலையை அலுவலர்களின் பார்வைக்கு கொடுக்க வேண்டும்.
4. ஏலம் மூலம் கோரப்பட்ட உயர்ந்தபட்ச விற்பனைத் தொகையை கோரிய ஏலதாரர் ஏலத் தொகையில் 25% தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலையாக உடன் ஏலம் நடத்தும் அலுவலரிடம் செலுத்திட வேண்டும். இவ்வாறு செலுத்த தவறினால், அவரது கேட்பு ரத்து செய்யப்படுவதுடன் அவர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.
5. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை கிரையம் பெற அதிகபட்சம் ஏலம் கோரி விதிகளின்படி 25% விற்பனை தொகையினை செலுத்திய நபர் மேற்படி சொத்தின் நிலுவையை ஏலம் நடந்த நாளிலிருந்து 7 தினங்களுக்குள் செலுத்திட வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முழுத்தொகையையும் செலுத்த தவறினால் குறிப்பிட்ட நபர் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகைகள் முழுவதும் அரசுக்கு பறிமுதல் செய்யப்படுவதுடன், விதிகளின்படி அடுத்தபடியாக அதிகத் தொகை ஏலம் கேட்ட நபருக்கு வாய்ப்பளிக்கப்படுவது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலரின் முடிவே இறுதியானது.
6. ஏலத்தில் விடப்படும் அசையாசொத்து அன்றைய தினம் உள்ள நிலையிலேயே விற்பனை செய்யப்படும் ஏலம் கோரும் முன் சம்பந்தப்பட்ட சொத்தினை நேரில் பார்வையிட்டு, பாதை வசதி விஸ்தீரணம், கட்டிட மதிப்பு மற்றும் இதர விபரங்களை ஆராய்ந்து கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு. பின்னால் இது தொடர்பான எந்த ஒரு பின் நிகழ்வுக்கும் அரசு பொறுப்பல்ல.
7. ஏல அறிவிக்கை பிரசுரிக்கப்பட்ட பின்னரோ அல்லது விற்பனை உறுதி ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்னரோ நிபந்தனைகளை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ தகுதி பெற்ற அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. அதற்கு நஷ்ட ஈடு கோர மனுதாரர்களுக்கு உரிமையில்லை.
8. உறுதி செய்யப்பட்ட விற்பனையை சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்கள் பொது நன்மையை கருதி ரத்து செய்ய நேரிட்டால் அதனால் ஏற்படும் இழப்புக்கு ஈடு கோர மனுதாரருக்கு உரிமையில்லை.
9. அறிவிப்பில் உள்ள சொத்துக்களின் மேல் நீதிமன்றத்தில் ஆணை தடையாணை பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட சொத்தினை விற்பனை செய்வது குறித்து தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. சொத்தினை வாங்கியவருக்கு எந்த காரணத்தினை முன்னிட்டும் இழப்பு ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க இயலாது.
11. சொத்து தொடர்பான மேல் விபரங்களை அலுவலக வேலை நாட்களில் இராதாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
12. 18 வயதிற்குட்பட்டோர் ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது. ஏலம் நடத்தும் அலுவலர் எந்த ஒரு குறிப்பிட்ட நபருக்கும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கலாம். எவ்வித காரணமும் அறிவிக்காமல் ஏலம் நடத்தும் இடத்திலேயே எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் வெளியேற்றுவதற்கு ஏலம் நடத்தும் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. ஏலத்திற்கு விலை கோருபவர்கள் ரூ.10,000/-க்கு குறைந்து ஏலத்தொகையை அதிகப்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.
14. ஏலம் நடத்துமிட இடத்திற்கும் வெளியே இருந்து கேட்கும் கேள்விகளும் ஏலம் முடிந்த பின்பு வரும் கோரிக்கைகளும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒவ்வொரு ஏலதாரரும் தனிப்பட்ட முறையில் ஏலம் கோர வேண்டும். ஏலதாரர்கள் கூட்டாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இணைந்தோ ஏலம் கேட்டால் அத்தொகையை கோரிக்கை அனுமதிக்கப்படமாட்டாது.
15. ஏலம் ஆரம்பமாகும்போது இந்த ஏல விளம்பரத்தில் கண்ட நிபந்தனைகள் மற்றும் ஏலம் நடத்தும் அலுவலரால் அறிவிக்கப்படுகின்ற சிறப்பு நிபந்தனைகள் ஆகியவை வாசித்து காண்பிக்கப்படும். ஒவ்வொரு ஏலதாரரும் அந்த நிபந்தனைகளை வாசித்து அறிந்து கொண்டதை ஒப்புக்கொள்ளும் வகையில் ஏல விளம்பரத்தின் நகலில் கையொப்பம் இட வேண்டும்.
16. உயர்ந்த ஏலதாரர் அப்போதைய நிலவரப்படி வருமானவரி மற்றும் பத்திர கட்டணத்தொகை செலுத்தி பத்திரம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
17. ஏலம் உறுதி செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட ஏலக்கோரிக்கையை உயர்ந்த ஏலதாரர் பெற்றுக் கொள்ள இயலாது.
18. தபால் மூலமாகவோ, தந்தி மூலமாகவோ கோரப்படும் ஏலக்கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| 1. ஏலதாரர் பெயர் : | |
| 2. முழு முகவரி கீழ்க்கண்ட ஆதாரங்களில் (ஏதேனும் ஒன்றுடன்) :<br>அ. குடும்ப அட்டை நகல்<br>ஆ. வாக்காளர் அடையாள அட்டை<br>இ. வங்கி கணக்கு புத்தக நகல் | |
| 3. ஏலம் கோரும் சொத்தின் விபரம் (ஏல விளம்பரத்தில் உள்ளபடி) : | புல எண் \| வட்டம் \| [illegible] \| விஸ்தீரணம் |
| 4. ஏல பிணைய வைப்புத் தொகை ரூ.25,000/-ஐ தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி அவர்கள் பெயரில் கேட்பு வரைவோலையாக (D.D) பெற்று இணைக்கப்பட்ட விபரம். | கேட்பு வரைவோலை எண் \| தொகை \| நாள் |

செ.ம.தொ.இ./930/வரைகலை/2015

**தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி**